DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI

ST.C.No.409 /2017 P.W. 1

PW.1 கிருஷ்ணகுமார் த/பெ. தேசகிருஷ்ணன் நாள் 09.06.2025

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் ரூ.6 லட்சம் பணத்தை எங்கு எப்போது கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் ரூ.6 லட்சம் பணத்தை கொடுக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 05.30 மணி இருக்கும். காசோலையை எதிரி வீட்டில் வைத்து தான் கொடுத்தார். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 09.30 மணி இருக்கும். காசோலை கொடுத்த நாளில் இருந்து எத்தனை நாட்கள் கழித்து கலெக்சனுக்கு செலுத்தினேன் என்றால் அன்றே செலுத்தினேன். சாட்சி மீண்டும் 2 ½ மாதங்கள் கழித்து தான் காசோலையை வங்கியில் செலுத்தினேன் என்று கூறுகிறார். அவர் என்று தேதி போட்டுக்கொடுத்தாரோ அதே தேதியில் செலுத்தினேன். அந்த காசோலையில் கையொப்பம் மற்றும் இதர விவரங்களை யார் பூர்த்தி செய்தது என்றால் எதிரிதான் பூர்த்தி செய்தார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காசோலையில் கையொப்பத்திற்கு முன் D என initial போடபப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த எதிரியின் கணவர் பெயர் என்ன என்றால் சிவக்குமார். அவர் என்னுடைய நண்பர் என்றால் சரிதான். அப்போது D என்கிற initial எதற்காக போட்டுள்ளீர்கள் என்று நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. மேற்படி காசோலை Insufficient funds என்ற காரணத்துடன் திருப்பப்படவில்லை என்றால் சரிதான். காசோலையில் உ்ள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்தே இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் எனது நண்பர் என்ற முறையில் அவருக்கு நான் கொடுத்த கடனுக்காக அத்தாட்சிக்காக இந்த காசோலை பெறப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரி அரசு ஊழியர் என்றால் சரிதான். எதிரி அரசு ஊழியர் என்பதால் அவரிடம் இருந்து பணம் எளிதாக வாங்கிவிடலாம் என்ற காரணத்திற்காக கையொப்பம் போட்டு தராத வெற்று காசோலையை நானே பூர்த்தி செய்து அதை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் காசோலையை கையெழுத்து நிபுணருக்கு ஆய்வுக்கு அனுப்புவதற்கு எனக்கு ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. காசோலை திருப்பப்பட்ட சமயத்தில் நானும், எதிரியின் கணவரும் வழக்கறிஞர் ஒருவர் முன்னிலையில் அமர்ந்து பஞ்சாயத்து பேசினோம் என்றால் இல்லை. அப்போது நானும், எதிரியின் கணவரும் ரூ.10/- பத்திரத்தில் ஒரு சமரச ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. உண்மையிலே எனக்கும், இந்த வழக்கின் எதிரிக்கும் எவ்வித கொடுக்கல் வாங்கல் கிடையாது என்றும், எதிரி இந்த காசோலையை இந்த வழக்கு தொகைக்காக கொடுக்கவில்லை என்றும், எதிரியின் கணவரிடம் நான் கொடுத்த கடன் தொகைக்காக Surety க்காக பெறப்பட்ட இவ்வழக்கு காசோலையை நானாகவே எதிரியின் கையொப்பத்தை போட்டு விபரங்களை பூர்த்தி செய்து

வங்கியில் செலுத்தினேன் என்றும், அந்த காரணத்திற்காகத்தான் காசோலையானது வங்கியால் பணமாகாமல் திருப்பட்டது என்றும், அந்த காசோலை வைத்தே இந்த பொய் வழக்கை எதிரி மீது நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**புகார்தாரர் தரப்பு மறுவிசாரணை**

மசா.ஆ.2 ஆவணமானது 09.01.2017 ம் தேதியன்று குறிப்பிடப்பட்டுள்ளது. மசா.ஆ.3 ஆவணமானது வங்கியில் காசோலையை கலெக்சனுக்கு போட்ட தேதியும் 09.01.2017 ம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மசா.ஆ.3 ஆவணத்தில் காசோலையை கலெக்சனுக்கிற செலுத்தியது யார் என்று விவரம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் counter folio அதில் மட்டும் தான் செலுத்தியவர் கையெழுத்து வரும்.

Sd/---J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.